தின் விளைவாக தமிழ்நாட்டு மக்களுக்கும் நல்ல பல செய்திகளை அவர் தெரிவிக்க முடியும். அரசாங்கத்திற்கும் பல காரியங்களைச் செய்வதற்கு, மக்களுக்கு, உழைப்பாளி மக்களுக்குச் சாதகமான காரியங்களைச் செய்வதற்கு அது உதவியளிக்கும் என்ற முறையிலே, அவருடைய அந்தச் சுற்றுப் பயணத்தை மீண்டும் வாழ்த்தி, அவருடைய சுற்றுப் பயணம் இனிதாக, சிறப்பாக அமைய வேண்டுமென்ற என்னுடைய கருத்தைக் கூறி அமர்கிறேன், வணக்கம்.

(ஆ) பார்வையாளர் மாடத்தில் அமர்ந்திருந்த ஸ்ரீலங்கா அரசு கிராம தொழில்துறை அமைச்சர் திரு. தொண்டை மானுக்குப் பாராட்டு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஸ்ரீலங்கா அரசின் கிராமத் தொழில்துறை அமைச்சர் மாண்புமிகு தொண்டைமான் அவர்கள் இன்றையதினம் பார்வையாளர் மாடத்திலே இருந்து நம்முடைய மன்ற நடவடிக்கையை கவனிக்கிறார். அவருக்கு நமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறோம். (பலத்த ஆரவாரம்)

(அ) ரஷ்ய நாட்டிற்குச் செல்லும் அவை முன்னவருக்குப் பாராட்டு. (தொடர்ச்சி)

திரு. ஜே. ஜேம்ஸ்: பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் நமது அருமைக்குரிய நாஞ்சில் மனோகரன் அவர்கள் நாளையதினம் வெளிநாட்டுச் சுற்றுப் பயணம் மேற் கொள்ள இருக்கின்றார்கள். அதற்காக அன்னாரை வழி அனுப்புகின்ற முறையில், நாம் இங்கே ஆசிகூறி வழி அனுப்ப கடமைப்பட்டிருக்கிறோம். எனக்கு முன்னதாக அருமை நண்பர்கள் சிறப்பான பல கருத்துக்களை இங்கே எடுத்துக் கூறினார்கள். கடந்த இரண்டு மாத காலமாக, இந்த அவையில் பல்வேறு கருத்துக்களில் அரசோடு நாங்கள் மோதி, இன்றைய தினம் அவற்றையெல்லாம் மறந்து நம்மில் ஒருவராக நாஞ்சில் மனோகரன் அவர்கள் வெளிநாடு செல்ல இருக்கின்றார்கள் என்பதை அறிகின்றபொழுது, நிச்சயமாக இந்த அவையில் இருக்கின்ற அனைவரையும் விட நாங்கள் அதிக மகிழ்ச்சி அடைவோம் என்பதை இங்கே கூறாமலே, நீங்கள் அறிவீர்கள்.

எங்கள் மாவட்டத்திற்குச் சொந்தமானவரும்கூட (சிரிப்பு), எங்களில் ஒருவராகவும் இருக்கிறவர். ஒரு வேளை அவர் வெளிப்படையாக அதனை இந்த நாடு அறிந்துகொள்ளக் கூடாது என்று பல்வேறு சமயங்களில் முயற்சி எடுத்துக் கொண்டாலும் கூட அந்த எண்ணம் அவருக்கு இருக்கிறது